செ.வெ.எண்: 24 நாள்:20.08.2020

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாவட்டத்தில் பயோமெட்ரிக் முறையில் நியாயவிலைக் கடைகளில் உணவுப் பொருட்கள் வழங்கும் முறையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள்**

**அதன் விபரம் வருமாறு:**

கரூர் வட்டம் ஆட்சிமங்கலம் நியாயவிலைகடையில் பயோமெட்ரிக் முறையில் உணவு பொருட்கள் வழங்கும் முறையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், அவர்கள் இன்று (20.08.2020) தொடங்கி வைத்து, குடும்ப அட்டைத்தாரர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார்கள்.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தாவது:**

தமிழக அரசின் உத்தரவின்படி, கரூர் மாவட்டத்தில் பொது விநியோகத்திட்டத்தின்கீழ் செயல்பட்டுவரும் 583 நியாயவிலைக் கடைகளிலும் பயோமெட்ரிக் முறையைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் முறை இன்றுமுதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த நடைமுறையால், பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் முறையாக சென்றடைவது உறுதிப்படுத்தப்படும். மின்னணு குடும்ப அட்டையில் இடம் பெற்றுள்ள குடும்ப உறுப்பினர்களே நேரடியாக நியாயவிலைக் கடைகளில் தங்களது கைரேகையை பதிவு செய்து பொருட்களை பெற்றுச் செல்லும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது . மேலும் , கைரேகை வைக்க இயலாதவர்கள் மற்றும் நேரடியாக நியாயவிலை கடைக்கு வர இயலாத மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டவர்களுக்கு குடும்ப அட்டைதாரர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் மூலம் பொருட்கள் வழங்குவதற்கான வழிவகையும் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வின் போது கூட்டுறவு சங்களின் இணைப்பதிவாளர் திரு.பொ.காந்திநாதன், மாவட்ட வழங்கல் அலுவலர் செல்வி.ஜெ.ஹஸ்ரத்பேகம், கரூர் வருவாய் கோட்டாச்சியர் திரு.என்.எஸ்.பாலசுப்பிரமணியன் , தமிழ்நாடு நுகர்வோர் வாணிபகழக மண்டல மேலாளர் திரு.பொ.பாண்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் , கரூர் .**